தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழகத்தில் மேல் அடுக்கு சுழற்சி இன்று மழை பெய்ய வாய்ப்பு

தமிழக உள்மாவட்டங்களில் வளி மண்டல மேல்அடுக்கு சுழற்சி ஏற்பட்டுள்ளதால் வெள்ளிக்கிழமை (அக்.17) மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: தமிழகத்தின் உள்மாவட்டங்களையும் கேரள மாநிலத்தையும் ஒட்டிய பகுதியில் வளி மண்டல மேல் அடுக்கு சுழற்சி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் ஆங்காங்கே கனமழை பெய்யும். மேலும் இந்த மழை மேலும் சில நாள்களுக்குத் தொடரும் என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நிலையில் வியாழக்கிழமை காலை நிலவரப்படி கழுகுமலையில் 90 மி.மீ. மழையும் நான்குநேரியில் 80 மி.மீ., கமுதியில் 70 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. இதேபோல, பாபநாசம் (60 மி.மீ.), நத்தம், பரமக்குடி, கடலூர், குன்னூர் (50 மி.மீ.), சங்கரன்கோவில் (40 மி.மீ.), திருப்பத்தூர், சிதம்பரம், கோவை, வேலூர், மேலூர், நாகர்கோவில், பவானிசாகர், தரங்கம்பாடி, தென்காசி (30 மி.மீ.), ஏற்காடு, சத்தியமங்கலம், தூத்துக்குடி, மேட்டுப்பாளையம், மதுராந்தகம், மணப்பாறை, திருவாரூர், திண்டிவனம், ஆரணி, கரூர், கிருஷ்ணகிரி, அம்பாசமுத்திரம், சென்னை (20 மி.மீ.), கொடைக்கானல், திருவையாறு, புதுச்சேரி, மதுரை, கூடலூர், சிவகாசி, புதுக்கோட்டை, பூந்தமல்லி, திருச்செந்தூர், குழித்துறை, செங்கோட்டை, பட்டுக்கோட்டை, இரணியல், காரைக்கால், கயத்தாறு, ராமநாதபுரம், சிவகிரி, திண்டுக்கல், பொள்ளாச்சி, அவிநாசி, சோழவரம், திருச்செங்கோடு, பாளையங்கோட்டை, வால்பாறை, பேச்சிப்பாறை, கள்ளக்குறிச்சி,

ராஜாபாளையம், தாம்பரம் (10 மி.மீ.) ஆகிய பகுதிகளிலும் மழை பெய்துள்ளது.

**அவரைக்காய் விலை உயர்வு**



சென்னை கோயம்பேடு காய்கறி சந்தையில் அவரைக்காய் விலை கிலோ ரூ.50-ஆக உயர்ந்துள்ளது. ஆசியாவிலேயே மிகப்பெரிய காய்கறி விற்பனை மையமான கோயம்பேடு காய்கறி சந்தைக்கு, நாள்தோறும் லாரிகள் மூலம் காய்கறிகள் விற்பனைக்கு கொண்டுவரப்படுகின்றன. கடந்த வாரம் அவரைக்காய் விலை கிலோ ரூ. 40-க்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில் வியாழக்கிழமை ரூ. 50-ஆக உயர்ந்திருந்தது. பாகற்காய், புடலங்காய் உள்ளிட்டவற்றின் விலை கிலோவுக்கு ரூ.5 குறைந்துள்ளது. இது குறித்து கோயம்பேடு காய்கறி சந்தை வியாபாரிகள் கூறியது: கோயம்பேடு காய்கறி சந்தைக்கு கொடைக்கானல், ஒட்டன்சத்திரம், தேனி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து கடந்த வாரம் 10 லாரிகளில் கொண்டுவரப்பட்ட அவரைக்காய் வரத்து, தற்போது 5 லாரிகளாகக் குறைந்துள்ளது. இதனால் அவரைக்காய் விலை ரூ.5 முதல் ரூ.10 வரை உயர்ந்துள்ளது. ஆனால், மற்ற காய்கறிகளில் விலையில் பெரிய அளவில் மாற்றம் இல்லை. தற்போது விற்பனை மந்தமாக இருப்பதால், தீபாவளிவரை விலையில் பெரிய அளவில் மாற்றம் இருக்காது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

**கோயம்பேடு சந்தையில் வியாழக்கிழமை (அக். 16) விற்பனையான காய்கறிகளின் விலை நிலவரம் கிலோவில். அடைப்பிற்குள் பழைய விலை:**

அவரைக்காய் 50 (40)

நாட்டுத் தக்காளி 15 (15)

நவீன் தக்காளி 25 (25)

பெரிய வெங்காயம் 20 (20)

சின்ன வெங்காயம் 35 (30)

பீட்ரூட் 20 (15)

கத்தரிக்காய் 20 (20)

முட்டைகோஸ் 10 (10)

கேரட் 40 (35)

கோவைக்காய் 15 (15)

முள்ளங்கி 20 (20)

உருளைக்கிழங்கு 28 (26)

புடலங்காய் 15 (20)

வெண்டைக்காய் 15 (25)

நூக்கல் 15 (15)

பீன்ஸ் 40 (40)

பாகற்காய் 20 (25)

பச்சை மிளகாய் 25 (25)

**<u>மீன் வளர்ப்பு தொழில் செய்ய விவசாயிகளுக்கு மானியம்</u>**

விருதுநகர் மாவட்டத்தில் மீன் வளர்ப்பு முகமை திட்டம் சார்பில் மீன் வளர்ப்பு தொழில் செய்ய புதிய குளம் அமைத்தல் மற்றும் குளங்களை புதுப்பித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொள்வதற்காக விவசாயிகளுக்கு மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக ஆட்சியர் தெரிவித்துள்ளார். இது குறித்து ஆட்சியர் டி.என். ஹரிஹரன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு விவரம்: விருதுநகர் மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் சார்பில் மீன் வளர்ப்பு பணிகளை மேற்கொள்வதற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. எனவே, இத்தொழிலில் ஆர்வமுடையோர் மீன் வளர்ப்பு முகமை திட்டத்தில் உறுப்பினராகி தங்கள் வருவாயையும் உயர்த்திக் கொள்ளலாம். தற்போது, புதிய குளம் அமைத்தல், ஏற்கனவே உள்ள குளங்களை புதுப்பித்தல் மற்றும் மீன் வளர்ப்புக்காக மேற்கொள்ளப்படும் செலவு ஆகியவற்றுக்கு மானியம் வழங்கப்படுகிறது. அதில், மீன் வளர்ப்புக்காக புதிய குளம் ஒரு ஹெக்டேரில் அமைக்க திட்ட மதிப்பீடு ரூ.3 லட்சமும், ஏற்கனவே உள்ள குளத்தை சீரமைப்பதற்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.75 ஆயிரமும் மற்றும் மீன் வளர்ப்புக்கான மீன் குஞ்சு மற்றும் தீவனம் ஆகியவைகளுக்கான செலவு ஒரு ஹெக்டேருக்கு ரூ.50 ஆயிரம் வரையிலும் வழங்கப்படுகிறது. இதில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினருக்கு 25 சதவீதம் மானியமும், இதர பிரிவினருக்கு 20 சதவீதம் மானியமும் அளிக்கப்படுகிறது. இதில் ஆர்வமுள்ள விவசாயிகள் நீர்ஆதாரத்துடன் சொந்த விளைநிலம் வைத்திருக்க வேண்டும். உடனே விருதுநகரில் செயல்பட்டு வரும் மீன் வள உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி விண்ணப்பங்களை விலையில்லாமல் பெற்று குறிப்பிட்ட நாள்களுக்குள் விளைநில ஆவணங்களுடன் பூர்த்தி செய்து நேரில் அளிக்க வேண்டும். குறிப்பிட்ட விளைநிலம் உள்ள பகுதிகளில் மீன் வள உதவி இயக்குநர் அலுவலக தொழில் நுட்பக் குழுவினர் மீன் வளர்ப்புக்கு ஏற்ற இடமா என்பது

குறித்து ஆய்வு செய்த பின் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள். எனவே இதுபோன்று மீன் வளர்ப்பில் ஆர்வமுள்ள விவசாயிகள் மீன் வள உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயனடையுமாறு ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## பரமக்குடி பகுதியில் பலத்த மழை: மரங்கள் வேருடன் சாய்ந்தன

பரமக்குடி பகுதியில் புதன்கிழமை இரவு பெய்த பலத்த மழைக்கு பல்வேறு இடங்களில் மரங்கள் வேருடன் சாய்ந்தன. பரமக்குடி சுற்றுப்பகுதியில் கடந்த இரண்டு நாள்களாக லேசான மழை பெய்து வந்தது. இந்நிலையில், புதன்கிழமை இரவு இடி மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இதில் நகரின் தெருக்கள் முழுவதும் மழைநீர் தேங்கி வெள்ளம்போல் காட்சியளித்தது. இம்மழைக்கு பரமக்குடி நகர் காவல் நிலையம் பகுதியில் உள்ள 50 ஆண்டுகள் பழமை வாய்ந்த அத்தி மரம் வேருடன் சாய்ந்து, அருகில் இருந்த அங்கன்வாடி மையக் கட்டடத்தில் விழுந்தது. இரவு நேரம் என்பதால் அங்கு குழந்தைகள் மற்றும் காப்பாளர்கள் யாரும் இல்லாததால் பெரிய விபத்து தடுக்கப்பட்டது. இதேபோல் நகரின் பல்வேறு இடங்களில் மரங்கள் வேருடன் சாய்ந்து மின்கம்பங்களில் விழுந்ததால் இரவு முழுவதும் அப்பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

## நெகமத்தில் 45 மி.மீ. மழை

நெகமம் பகுதியில் வியாழக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 45 மி.மீ. மழை பெய்தது. பிற இடங்களில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ.ல்): அன்னூர் 8, பீளமேடு விமான நிலையம் 20.3, மேட்டுப்பாளையம் 20, பொள்ளாச்சி 10, பெரியநாயக்கன்பாளையம் 35, சூலூர் 16.2, வேளாண் பல்கலைக் கழகம் 36.2, வால்பாறை பி.ஏ.பி. 8, தாலுகா அலுவலகம் 2, கோவை தெற்கு தாலுகா அலுவலகம் 22, சோலையாறு 26, ஆழியாறு 8.8, திருமூர்த்தி

13, அப்பர் நீராறு 3, லோயர் நீராறு 2, பெருவாரிப்பள்ளம் 4, மாக்கினாம்பட்டி 9, மணக்கடவு 15.3, நெகமம் 45, நவமலை 4.

**<u>கோழி வளர்ப்புக்கு 50% மானியம்: ஆட்சியர்</u>**

கோழி வளர்ப்புக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படுவதாக கரூர் மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி தெரிவித்தார். மண்மங்கலம் பண்டுதகாரன்புதூர் கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், கரூர் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் வியாழக்கிழமை கோழி வளர்ப்போருக்கு நடைபெற்ற பயிற்சி முகாமை தொடக்கி வைத்து அவர் மேலும் பேசியது: தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் கோழி வளர்ப்புத் திட்டத்தின் மூலம் கரூர் மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளில் 87 பயனாளிகளுக்கு நாட்டுக்கோழி மற்றும் கறிக்கோழி வளர்க்க ரூ. 1.17 கோடி மதிப்பில் வங்கிக் கடனுதவியுடன் மானியத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தில் தமிழக அரசு மானியம் 25%, தேசிய வேளாண் வங்கியின் மூலம் 25% மானியமும் என 50%மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதேபோல நிகழாண்டிலும் 50% மானியம் வழங்கும் வகையில் ரூ. 60.12 லட்சம் மானிய நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு வங்கி உதவியுடன் நாட்டுக்கோழி வளர்ப்புக்கு 58 பேருக்கும், கறிக்கோழி வளர்ப்பிற்கு 16 பேருக்கும் வழங்க தேர்வு செய்யப்பட்டு இன்று பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது. பொதுமக்களிடையே நாட்டுக்கோழி பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் தொழில் முனைவோர் இதுபோன்ற திட்டத்தில் பங்கேற்று அதிகளவில் உற்பத்தி மையங்களை உருவாக்கிடலாம். இதன் மூலம் தங்களது பொருளாதாரம் உயர்வதுடன் பலருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும். மேலும் வறுமையில் உள்ள பயனாளிகளுக்கு, கோழி வளர்ப்பு மையம் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் அமைத்துக் கொடுத்திட திட்டமிடப்பட்டு வருகின்றன. அதுமட்டுமின்றி மாற்றுத்திறனாளிகள், புதுவாழ்வு திட்டத்தின் கீழ்

வறுமையில் உள்ள பயனாளிகளும் இத்திட்டத்தில் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்றார்.

**குடவாசலில் 35 மி.மீ. மழை**

குடவாசலில் புதன்கிழமை 35 மில்லி மீட்டர் மழை பெய்தது.திருவாரூர் மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதில் வியாழக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் அதிகபட்சமாக குடவாசலில் 35 மி.மீ. மழை பெய்தது. பிற இடங்களில் பெய்த மழையளவு மில்லி மீட்டரில் வருமாறு: நீடாமங்கலம் - 28.20, முத்துப்பேட்டை - 23, திருவாரூர் - 19.60, பாண்டவையாறு தலைப்பு - 17.80, மன்னார்குடி - 16, திருத்துறைப்பூண்டி - 5.60, நன்னிலம் 5.30 என்ற அளவில் பதிவானது. வியாழக்கிழமை வானம் குளிர்ந்த நிலையில் இருந்தது. மழை பெய்யவில்லை.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விலையை கட்டுப்படுத்த உருளைக்கிழங்கை இறக்குமதி செய்ய மத்திய அரசு முடிவு**



புதுடில்லி: அதிகரித்து வரும் உருளைக்கிழங்கு விலையை கட்டுப்படுத்தும் விதமாக வெளிநாடுகளில் இருந்து உருளைக்கிழங்கை இறக்குமதி செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது. கடந்த சில வாரங்களாகவே உருளைக்கிழங்கு விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. தலைநகர் டில்லியில் உருளைக்கிழங்கு விலை கிலோ, ரூ.35 முதல் ரூ.40 வரை விற்கப்படுகிறது. இந்நிலையில் உயர்ந்து வரும் விலையை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக விவசாயத்துறை அமைச்சர் ராதா மோகன் சிங் கூறியுள்ளார். இதனிடையே வெளிநாடுகளில் இருந்து உருளைக் கிழங்கை இறக்குமதி செய்ய முடிவு செய்துள்ளதாக விவசாயத்துறை செயலர் ஆசிஷ் பகுனா தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில், முதன்முறையாக நாங்கள் உருளைக்கிழங்கை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய உள்ளோம். இதன்மூலம் ஓரளவுக்கு விலையை கட்டுப்படுத்த முடியும், மேலும் பொதுமக்களுக்கும் தட்டுப்பாடு இன்றி உருளைக்கிழங்கு கிடைக்க இது வழி வகுக்கும் என்று கூறியுள்ளார்.

## விவசாயிகளுக்கு காய்கறி சாகுபடி பயிற்சி

ஆர்.கே.பேட்டை : ஆர்.கே.பேட்டை வேளாண் தோட்டக்கலை பிரிவு சார்பில், நகர்ப்புற காய்கறிகள் சாகுபடி குறித்து, 150 விவசாயிகளுக்கு நேற்று, பயிற்சி அளிக்கப்பட்டது. ஆர்.கே.பேட்டை தோட்டக்கலை உதவி இயக்குனர் சித்தகங்கையா வரவேற்றார். மாவட்ட உதவி இயக்குனர் நவநீதகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, நகர்ப்புற காய்கறி சாகுபடியில், இருமடங்கு உற்பத்தியும், மூம்மடங்கு லாபமும் பெறுவதற்கான வழிமுறைகளை, விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம், கீழ்பெண்ணாத்துார் உள்ளிட்ட பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள, நகர்ப்புற காய்கறி தோட்டங்களில், ஆர்.கே.பேட்டை வட்டார விவசாயிகள் 150 பேருக்கு கள பயிற்சியும், அந்த பகுதி விவசாயிகளுடன் கலந்துரையாடலும் விரைவில் ஏற்பாடு செய்யப்பட உள்ளது.இதில்,

பங்கேற்று, காய்கறி சாகுபடியை சிறப்பாக மேற்கொள்ள, விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

**கொல்லிமலை விவசாயிகளுக்குபுதர் துவரை சாகுபடிக்கு அழைப்பு**

நாமக்கல் ;"கொல்லிமலை பகுதி விவசாயிகள், தங்களது புரதச்சத்து குறைப்பாட்டை தவிர்க்க, புதிய ரகமான, புதர் துவரை சாகுபடி செய்ய வேண்டும். மேலும், இதற்கான, இலவச புதர் துவரை நாற்றுகள், வேளாண் அலுவலகத்தில் சப்ளை செய்யப்படுகிறது' என, கொல்லிமலை வேளாண் உதவி இயக்குனர் சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:கொல்லிமலை பகுதி விவசாயிகள், கடந்த, 25 ஆண்டுகளுக்கு முன், மிகச்சிறு தானியங்களான திணை, சாமை, வரகு, பெரும் துவரை உள்ளிட்டவற்றை சாகுபடி செய்தனர். இதில், பாரம்பரிய துவரை சாகுபடியை தொடர்ந்து செய்யாததால், அப்பகுதி குழந்தைகள் மற்றும் மக்கள், புரதச்சத்து குறைபாடு உள்ளவர்களாக உள்ளனர். எனவே, மலைப்பகுதியில் தரிசாக கிடக்கும் நிலங்களில், புதர் துவரை எனப்படும், தொடர்ச்சியாக மகசூலை தரும், பி.எஸ்.ஆர்., 1 என்ற ரகத்தை, மலைப்பகுதியில் பயிரிட, அரசு முடிவு செய்துள்ளது. இந்த ரக துவரை, 150 முதல், 200 செ.மீ., வரை வளர்ந்து, பச்சை காய்கள், மூன்று முதல், நான்கு கிலோ வரை மகசூல் தரும்.இதற்காக, இலவச புதர் துவரை நாற்றுகள், கொல்லிமலை விவசாயிகளுக்காகவே, வேளாண் துறை சார்பில், தற்போது சப்ளை செய்யப்படுகிறது. மேலும், விவரங்களுக்கு, 04286 - 247414, 247585 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பட்டு வளர்ச்சித் துறை பணி பதிவை சரி பார்க்க அழைப்பு**

நாமக்கல்:"பட்டு வளர்ச்சித் துறையில் காலியாக உள்ள, 157 இளநிலை பட்டு வளர்ச்சி ஆய்வாளர் பணியிடத்திற்கு, தகுதியான பதிவுதாரர்கள், தங்களது பதிவை சரிபார்த்துக் கொள்ள வேண்டும்' என, மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட

அறிக்கை:சேலம் பட்டு வளர்ச்சித்துறை இயக்குனர் அறிவிப்பின்படி, 157 இளநிலை பட்டு வளர்ச்சி ஆய்வாளர்கள் பணியிடத்திற்கான காலிப்பணியிடம், வேலைவாய்ப்பு துறையின் மூலம் நிரப்பப்படுகிறது. இதன் கல்வித்தகுதியாக, எஸ்.எஸ்.எல்.ஸி., தேர்ச்சி, பட்டு வளர்ச்சியில் ஆறு மாத முன் அனுபவ சான்று அல்லது, ஓசூர் அரசு பட்டு வளர்ச்சித்துறையில், ஆறு மாத பயிற்சி சான்று வைத்திருக்க வேண்டும்.கடந்த, ஜூலை, 1ம் தேதி, 18 வயது பூர்த்தியாகி இருக்க வேண்டும். பி.சி., எம்.பி.சி., பிரிவினருக்கு, 28 வயது, எஸ்.ஸி., எஸ்.டி., பிரினருக்கு, 33 வயது, அதிகப்பட்ச வயதாக கணக்கிடப்படும். தகுதியான பதிவுதாரர்கள், தங்களது பதிவின் மூப்பு விவரங்களை, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

## உர மேலாண்மையை கடைபிடிக்க விவசாயிகளுக்கு அறிவுரை

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகள், உர மேலாண்மையை செயல்படுத்தி, அதிக மகசூல் பெறலாம்' என்று, உழவர் பயிற்சி நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து, அவர்கள் கூறியதாவது: உரமும், நீரும் தென்னைக்கு தலையாய தேவைகளாகும். நீர் தேவையை பொறுத்தவரை, நன்கு வளர்ந்த மரம் ஒன்றுக்கு, ஒரு நாளைக்கு, 100 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. பல இடங்களில், தண்ணீர் பற்றாக்குறையால், நீர் மேலாண்மை பின்பற்ற முடியாத நிலை உள்ளது. மேலும், தென்னை மரங்களுக்கு, சரியான அளவில், சரியான நேரத்தில் உரங்களை இடாமல் இருப்பதே, மகசூல் குறைய முக்கியமான காரணமாகும். பொதுவாக, பருவ மழை காலத்தில், மண்ணில் மிதமான ஈரம் இருக்கும்போது, உரமிடுதல் அவசியமாகும். தென்னையை பொறுத்தவரை பரிந்துரை செய்யப்படும் உரத்தினை, இரண்டு சம அளவாக பிரிந்து, ஜூன், ஜூலை மாதத்தில், மரத்தை சுற்றி, அரை வட்டத்தில் ஒரு பாதியும், மறு பாதியை, இரண்டாவது அரை வட்டத்தில்,

டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களிலும் இட வேண்டும். தென்னை மரத்திலிருந்து, 1.50 மீட்டர் முதல், 2 மீட்டர் வரையிலான பகுதியில் உள்ள வேர்கள், அதிக உறிஞ்சும் திறன் கொண்டதாக இருக்கும். எனவே, மரத்தில் இருந்து, 1.80 மீட்டர் தொலைவில், ஒரு அடி ஆழத்தில், அரைவட்ட வடிவில் குழி எடுத்து, உரமிட்டு, நீர் பாய்ச்ச வேண்டும். மேலும், தென்னையை சுற்றிலும், பசுந்தாள் உரப்பயிர்களான சணப்பு, தக்கைப்பூண்டு ஆகியவற்றை பயிரிட்டு, மண்ணில் மடக்கி உழ வேண்டும். தென்னையில் நடவு செய்த, ஆறு மாதத்தில் இருந்து, ஐந்து ஆண்டுகள் வரை தொழு உரம், யூரியா, பொட்டாஷ், வேப்பம் புண்ணாக்கு ஆகியவற்றை இட வேண்டும். மேலும், தென்னைக்கு என, நுண்ணூட்ட சத்து கலவையை, தமிழ்நாடு வேளாண்மை துறையினரால் தயாரித்து அளிக்கப்படுகிறது. இக்கலவை, ஒரு கிலோ மற்றும், ஒரு பாக்கெட் அஸோஸ்பைரில்லம், ஒரு பாக்கெட் பாஸ்போ பாக்டீரியா உயிர் உரங்களை கலந்து இட வேண்டும். நுண்ணூட்ட சத்து கலவை மற்றும் உயிர் உரங்களை, தேவையான அளவு, தொழு உரத்துடன் கலந்து, தனியே இடலாம். எக்காரணத்தை கொண்டும், ரசாயன உரங்களுடன், நூண்ணூட்ட சத்து கலைவையை கலக்கக் கூடாது. எனவே, தென்னை விவசாயிகள், உர பரிந்துரையின்படி ஆண்டு தோறும் தவறாமல் உரமிட வேண்டும். இவ்வாறு செய்தால், குரும்பைகள் அதிகம் பிடித்து, குரும்பை கொட்டுவது வெகுவாக குறைக்கப்பட்டு, மகசூல் அதிகரிப்பதுடன், காய்களின் தரம் மற்றும் எண்ணைய் சத்து அதிகரிக்கும்.இவ்வாறு கூறினர்.

## ஈரோட்டில் பலத்த மழை

ஈரோடு:ஈரோட்டில் நேற்று காலை முதல் அவ்வப்போது மழை பெய்தது.ஈரோட்டில் நேற்று அதிகாலையே வெயில் சுட்டெரித்தது. ஆனால், நண்பகல், 12 மணிவாக்கில் சாரல் மழை பெய்தது. பின்

அவ்வப்போது விட்டு, விட்டு சாரல் மழை, மதியம், மூன்று மணி வரை நீடித்தது. சற்று ஓய்வுக்குப்பின், மாலை, 5 மணி, 7 மணிக்கும் நல்ல மழை பெய்தது. தொடரும் மழையால் சீதோஷ்ண நிலையில் மாற்றம் ஏற்பட்டு, குளிர் நிலவுகிறது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி, பவானிசாகர், 28.2 மி.மீட்டர், சத்தியமங்கலம்,24, கொடிவேரி,9, கோபி,3.2, மொடக்குறிச்சி,22, சென்னிமலை,9, ஈரோடு,3 மி.மீட்டர் என மழையளவு பதிவானது.

## "விவசாய படிப்பால் விண்ணை முட்டும் வளர்ச்சி'; வேளாண் கல்வி தினத்தில் பயனுள்ள தகவல்

ஊட்டி : "விவசாய படிப்பு மூலம், உயர் பதவிகளை எளிதாக எட்ட முடியும்' என, அறிவுறுத்தப்பட்டது. மத்திய மண் மற்றும் நீர் வளப்பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் ஊட்டி ஆராய்ச்சி நிலையத்தில் "வேளாண்மைக் கல்வி தினம்' நேற்று, கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரும், மைய முதுநிலை விஞ்ஞானியுமான (மண் வளம்) டாக்டர் ராஜன் வரவேற்றார்.நிலைய தலைவர் (கூடுதல் பொறுப்பு) டாக்டர் சுந்தராம்பாள் தலைமை வகித்தார்.சிறப்பு விருந்தினராக பங்கேற்ற, நீலகிரி கூட்டுறவு துறை இணை இயக்குனர் முருகன் பேசுகையில்,""நாட்டில், உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க பல முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. விவசாயம், அதை சார்ந்த படிப்புகளை மாணவ, மாணவியர் தேர்வு செய்தால், நல்ல சம்பளத்தில் வேலை வாய்ப்பு பெற்று, உயரிய பதவிகளுக்கு எளிதாக வர முடியும். வெளிநாடுகளில், விவசாயம் சார்ந்த தொழில் துறைகளுக்கு கிராக்கி அதிகம்," என்றார். ஊட்டி தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் டாக்டர் அனிதா பேசுகையில்,""நாட்டில், 80 சதவீதம் பேர் விவசாயத்தை சார்ந்துள்ளனர்; பொருளாதார வளர்ச்சியில் விவசாயம் முக்கியப் பங்காற்றுகிறது. விவசாயம் அதை சார்ந்த மீன் வளம், வனம்,

தோட்டக்கலை உட்பட துறைகளில், ஆராய்ச்சி துறையை தேர்வு செய்யும் பட்சத்தில், அவர்களின் எதிர்காலம் சிறப்பாக இருக்கும்; மத்திய, மாநில அரசு துறைகள், தனியார், பொதுத்துறை நிறுவனங்களில், விவசாய மாணவர்களுக்கு வாய்ப்புகள் அதிகம்," என்றார். இதில், 15க்கும் மேற்பட்ட பள்ளிகளில் இருந்து மாணவ,மாணவியர் பங்கேற்றனர். அவர்களுக்கு வேளாண் துறையின் முக்கியத்துவம், வேளாண் அறிவியலில் பட்டம் பெறுவதன் மூலம் கிடைக்கும் வேலை வாய்ப்புகள் மற்றும் உயர் கல்வி வாய்ப்புகள் குறித்து விளக்கப்பட்டன. அவர்களுக்கு, ஆராய்ச்சி மையத்தில் உள்ள அருங்காட்சியகம், மண் ஆய்வுக்கூடம், ஆராய்ச்சிப் பண்ணை மற்றும் வானிலை கண்காணிப்பு மையத்தின் செயல்பாடுகள் குறித்து கள விளக்கம் அளிக்கப்பட்டது. மைய விஞ்ஞானி டாக்டர் கஸ்தூரி திலகம் நன்றி கூறினார்.

## எதிர்ப்பு சக்தி அளிக்கும் "கிவி' பழம் விற்பனை

திண்டுக்கல் :சளி, காய்ச்சலை நிவர்த்தி செய்யும் "கிவி' பழம் திண்டுக்கல்லில் விற்பனைக்கு வந்துள்ளன.நியூசிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் "கிவி' பழம் திண்டுக்கல்லில் நவம்பர் இறுதிவரை விற்பனை செய்யப்படும். பொதுவாக அந்தந்த சீசன்களில் விளையும் பழங்களை உட்கொள்ள வேண்டும் என மூதாதையர்கள் கூறுவர். ஒவ்வொரு பழத்திலும் ஒவ்வொரு விதமான மருத்துவ குணங்கள் அடங்கியிருக்கும். மனிதர்களுக்காக இயற்கை அளித்துள்ள வரப்பிரசாதம்தான் பழவகைகள். அந்த வகையில் தற்போது விற்பனைக்கு வந்துள்ள " கிவி' பழத்தை வாங்குவதில் மக்கள் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.பழக்கடை உரிமையாளர் ஜாபர் ஜாவித் கூறுகையில், ""சளி, காய்ச்சல் போன்றவற்றால் பாதிக்கப்படுபவர்களுக்கு "கிவி' பழத்தின் ஜூஸ்சினை வழங்குவர். ரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின் அளவை இந்த பழம் சமன்படுத்தும். நார்ச்சத்துடன்,

நோய் எதிர்ப்பு சத்தும் இதில் உள்ளது. ஒரு பழம் ரூ.35 க்கு விற்பனை செய்யப்படுகிறது,"என்றார்.

## மஞ்சளாறு அணை 27ல் திறப்பு

வத்தலக்குண்டு :மஞ்சளாறு அணை பாசனத்திற்காக வரும் 27ல் திறக்கப்படுவதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். வத்தலக்குண்டு, பழையவத்தலக்குண்டு, கண்ணாபட்டி, சிவஞானபுரம், குல்லிசெட்டிபட்டி, கணவாய்பட்டி, ஜி.தும்மலப்பட்டி, கட்டகாமன்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள நிலங்கள் மஞ்சளாறு அணை மூலம் பாசன வசதி பெறுகின்றன. தற்போது ஒரு மாதமாக மஞ்சளாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதியான கொடைக்கானலில் மழை பெய்து வருவதால் அணைக்கு நீர் வரத்து உள்ளது. அணை நிரம்பும் நிலையில் உள்ளதால் வரும் 27ல் பாசனத்திற்கு நீர் திறக்க பொதுப்பணித்துறையினர் ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். இது குறித்து மஞ்சளாறு அணை செயற்பொறியாளர் பாண்டி கூறுகையில், ""அணையில் 395 மி.கன அடி நீர் உள்ளது. நீர்வரத்து 110 மி.கன அடி. கசிவு 8 மி.கன அடி. அணையின் மொத்த கொள்ளளவு 57 அடியாகும். நேற்று முன் தினம் பெய்த மழை அளவு 12மி.மீ., கடைமடையான ஆலங்குளம் கண்மாய் பெரியாறு கால்வாய் மூலம் நிரம்பியதால், மழை தொடரும் என்ற எதிர்பார்ப்பில் குன்னுவாரன்கோட்டை கண்மாய் முதலில் நிரப்பப்படும்" என்றார்.

## தேனியில் முதன்முறையாக சனிக்கிழமை வாரச்சந்தை: நாளை முதல் கூடுகிறது

தேனி :தேனி வாரச்சந்தை முதன் முறையாக நாளை முதல் சனிக்கிழமைகளில் கூடுகிறது. தேனி வாரச்சந்தை நூறு ஆண்டுகளுக்கும் மேலாக ஞாயிற்றுக்கிழமை செயல்பட்டு வந்தது. இந்நிலையில் பஜார் கடைகளுக்கு ஞாயிற்றுக்கிழமை விடுமுறை விடப்பட்டுள்ளதாலும், ஞாயிற்றுக்கிழமை பொதுமக்கள் சந்தைக்கு வர தயக்கம் காட்டுவதாலும், சந்தை வியாபாரிகள் தங்களுக்கும் ஓய்வு தேவை என நகராட்சியிடம்

முறையீடு செய்ததாலும் சந்தையை சனிக்கிழமை நடத்தலாம், என நகராட்சி நிர்வாகம் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியது. இதனை அரசு ஏற்றுக்கொண்டு கெஜட்டில் உத்தரவை வெளியிட்டது. இதனைத் தொடர்ந்து நாளை முதல் (அக்., 18) வாரச்சந்தை சனிக்கிழமைக்கு மாற்றப்படும், என நகராட்சி நிர்வாகம் அறிவித்தது. நகராட்சி தலைவர் முருகேசன் கூறுகையில்," தேனியில் வாரச்சந்தை முதன் முறையாக நாளை முதல் சனிக்கிழமைகளில் கூடுகிறது. இனிமேல் சனிக்கிழமை தோறும் சந்தை நடக்கும். வியாபாரிகளின் வேண்டுகோளை ஏற்று இந்த நடைமுறை அமல்படுத்தப்பட்டுள்ளது,' என்றார்.

## அணைகளின் நீர்மட்டம்

தேனி: பெரியாறு 125.70 (152) அடி. நீர் வரத்து 1901 கன அடி. வெளியேற்றம் 1400 கன அடி. வைகை 43.64 (71)அடி. நீர் வரத்து 2189 கனஅடி. நீர் திறப்பு 1660 கன அடி. மஞ்சளாறு 55.00 (57)அடி. வரத்து 345 கன அடி. வெளியேற்றம் 284 கன அடி. சோத்துப்பாறை 121.03 (126.28)அடி. நீர் வரத்து 110 கன அடி. வெளியேற்றம் 3 கன அடி. 40 பேர்கைது ஆண்டிபட்டி, அக்.17-ஆண்டிபட்டியில் மறியல் செய்ய முயன்ற இந்திய கம்யூ.,கட்சியை சேர்ந்த 40 பேரை போலீசார் கைது செய்தனர். அத்தியாவசிய பொருட்கள் விலை உயர்வை கட்டுப்படுத்த வலியுறுத்துவது உட்பட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தியன் வங்கி முன் இந்திய கம்யூ.,கட்சியினர் மறியலுக்கு முயன்றனர். ஆண்டிபட்டி போலீசார் மறியலுக்கு முயன்ற 40 பேரை கைது செய்தனர்.

## சோத்துப்பாறை அணை இன்று நிரம்பும் வாய்ப்பு

பெரியகுளம்: கொடைக்கானல் மலைப்பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழையால் சோத்துப்பாறை அணை இன்று நிரம்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெரியகுளத்தில் இருந்து 8 கி.மீ., தொலைவில் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் சோத்துப்பாறை அணை உள்ளது. அணையின் மொத்த உயரம் 126 அடி. அணை நீர் மட்டம்

செப்.,22ல் 25 அடியாக இருந்தது. கொடைக்கானல் மலைப்பகுதியில் அவ்வப்போது கனமழை பெய்து வருவதால் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து அக்.,5ல் 85 அடியானது. மழை நீடித்ததால் அக்.,14ல் 100 அடியை எட்டியது. அக்.,15ல் 15 அடி உயர்ந்து 115 அடியாக இருந்தது. நேற்றும் அணை நீர்மட்டம் 6 அடி உயர்ந்து 121.3 அடியானதது. வினாடிக்கு 110 கனஅடி நீர் வரத்து உள்ளது. அணையின் மேற்பரப்பில் மழை பெய்து வருவதால் 6 அடி உயர்ந்து இன்று (அக்.17ல்) சோத்துப்பாறை அணை நிரம்பி ததும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

<u>பரமக்குடியில் மரம் சாய்ந்தது கமுதியில் அதிகபட்ச மழை</u>

பரமக்குடி: பரமக்குடியில் நேற்று முன்தினம் இரவு பெய்த பலத்த மழையால், 50 ஆண்டுகளான ஆலமரம் சாய்ந்தது. கமுதியில் அதிகபட்சமாக 73.60 மி.மீ., மழை பதிவாகியது. பரமக்குடியில் மூன்று ஆண்டுகளாக மழையின்றி வறட்சி தலைதூக்கி வருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு 10 மணி தொடங்கி ஒரு மணி நேரம் பலத்த மழை பெய்தது. தொடர்ந்து நேற்றும் விட்டு, விட்டு பெய்த மழையால் தெருக்களில் மழைநீர் ஆறாக பெருக்கெடுத்து ஓடியது. அய்யாத்துரை தெருவில் 50 ஆண்டுகளான ஆலமரம் சாய்ந்தது. இதனால் அவ்வழியாக செல்லும் மின்கம்பிகள் அறுந்து விழுந்தன. இரவு நேரத்தில் மரம் சாய்ந்ததால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. நகராட்சியினர் காலை முதல் மாலை வரை தொடர்ந்து மரத்தை வெட்டியதால், இவ்வழியாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது. குறிப்பிட்ட தெருக்களில் இரவு முதல் நேற்று நாள் முழுவதும் மின்சாரம் துண்டக்கப்பட்டதால் பொதுமக்கள் அவதியடைந்தனர்.தெருக்களில் பெருக்கெடுத்து ஓடிய நீர் சாக்கடையுடன் வைகை ஆற்றில் கலந்தது. இதனால் ஆறு முழுவதும் கழிவுநீர் தேங்கி சுகாதாரக்கேடாக உள்ளது. மழை அளவு விபரம் (மி.மீ.,): கமுதி-73.60, பரமக்குடி- 52.40, ஆர்.எஸ்.மங்கலம்- 20, தொண்டி- 18.90, மண்டபம்-16, பள்ளமோர்குளம்- 16, வாலிநோக்கம்-

15.40, திருவாடானை- 12, ராமநாதபுரம்- 10.40, வட்டாணம்-11, கடலாடியில் 10 மி.மீட்டர் மழை பெய்தது. மாவட்டம் முழுவதும் மொத்தம் 256.70 மி.மீ., மழை பெய்துள்ளது.. சராசரியாக 15.98 மி.மீ., மழை பதிவாகியுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கடலோர பகுதிகளில் கனமழை பெய்யும்**

சென்னை: இலங்கையை ஒட்டிய தென்கிழக்கு வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள காற்று சுழற்சி காரணமாக தென் தமிழகத்தில் கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் நிலவும் வெப்ப சலனம் காரணமாக வளி மண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி ஏற்பட்டு கடந்த இரண்டு நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக நேற்று கழுகுமலையில் 90 மிமீ மழை பெய்துள்ளது. நாங்குனேரி 80 மிமீ, கமுதி 70 மிமீ, பாபநாசம் 60 மிமீ, நத்தம், பரமக்குடி, கடலூர், புள்ளம்பாடி, குன்னூர் 50 மிமீ, சங்கரன்கோயில் 40 மிமீ, திருப்பத்தூர், பெரியநாயக்கன்பாளையம், சிதம்பரம், கொடவாசல், கோவை, பாவவினாசம், வேலூர், மேலூர், நாகர்கோயில், போடிநாயக்கனூர், நீடாமங்கலம், பரங்கிப்பேட்டை, தரங்கம்பாடி, தென்காசி, கோவில்பட்டி 30மிமீ மழை பெய்துள்ளது. இந்நிலையில், தென்மேற்கு பருவமழை மீண்டும் கேரளாவில் தீவிரம் அடைந்துள்ளது. இதையடுத்து வங்கக் கடலில் இலங்கையை ஒட்டிய தென்கிழக்கு பகுதியில் காற்று சுழற்சி உருவாகியுள்ளது. இதனால்

கேரளாவில் கனமழை பெய்யும். மேலும் கேரளாவை ஒட்டிய தென் தமிழக பகுதிகளிலும் கனமழை பெய்யும். தமிழகத்தின் பிறமாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யும். தமிழக கடலோரப் பகுதியில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்யும். சென்னையில் பொதுவாக மேகமூட்டம் காணப்படும். மாலையில் இடியுடன் கூடிய மழை பெய்யும்.

**பெரம்பலூரில் மழை விவசாயிகள் மகிழ்ச்சி 2மணி நேரம் பெய்தது**

பெரம்பலூர்,: பெரம்பலூரில் நேற்று அதிகாலை 2மணி நேரத்திற்கு இடியுடன் பலத்த மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். பெரம்பலூர் மாவட்டத்தின் ஆண்டுசராசரி மழையளவு 908மி.மீ ஆகும். இதில் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் குளிர்கால மழையாக 28மி.மீ மழையும், மார்ச், ஏப்ரல், மே ஆகிய 3மாதங்களில் கோடைகால மழையாக 91மி.மீ மழையும், ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர்ஆகிய 4 மாதங்களில் தென்மேற்கு பருவமழையாக 314மி.மீ மழை யும், அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய 3 மாதங்களில் வடகிழக்குப் பருவ மழை யாக 475மி.மீ மழை யும் என சேர்த்து 12 மாதங்களில் 908மி.மீ மழை பெய்கிறது. இதில் ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் பெய்யக்கூடிய தென் மேற்கு பருவமழை நடப் பாண்டு 280.70மி.மீ மட்டுமே பெய்தது. இது தென்மேற்குப் பருவமழையின் ஆண்டு சராசரியைக் காட்டிலும் 33.30மி.மீ குறை வாகும். நேற்று அதிகாலை இடி, மின் னலுடன் பெரம் பலூரில் பலத்த மழை பெய்தது. அதி காலை 4மணிக்குத் தொடங்கி, 6 மணிவரை தொடர்ந்து 2மணிநேரம் கனமழை பெய்தது. தொடர்ந்து காலை 8.30மணிக்குத் தொடங்கி 9மணிவரை பரவலாக நல்ல மழை பெய்தது. இதனால் மாவட்ட அளவில் அதிகப்படியான நிலப்பரப்பில் மக்காச்சோளம், பருத்தி, சின்னவெங்காயம் சாகுபடி செய் திடும் விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பெரம்பலூர்

மாவட்டத்தில் 24 மணிநேரத்தில் பதிவான மழை அளவு விபரம்: பெரம்பலூர்: 19 மி.மீ. வெண்பாவூர் 9மி.மீ. தழுதாழை23மி.மீ. செட்டிக்குளம் 3மி.மீ. மொத்த மழை அளவு 54மி.மீ. சராசரி 10.8 மி.மீ.

## பாளை. வேளாண் உதவி மையத்தில் நாளை தென்னை விளைச்சல் பயிற்சி

நெல்லை, : பாளையங்கோட்டை வேளாண்மை உதவி மையத்தில் அக்.17ம் தேதி தென்னையில் அமோக விளைச்சலுக்கான பயிற்சி நடக்கிறது. இதுகுறித்து கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் (பொறுப்பு) சுப்பிரமணயன் கூறியிருப்பதாவது: கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி மற் றும் ஆராய்ச்சி நிலையத்தை சார்ந்த பாளையங்கோட்டை வேளாண் உதவி மையத்தில் நாளை (17ம் தேதி) தென்னையில் அமோக விளைச்சலுக்கு வழிமுறைகள் குறித்த தலைப்பில் தென்னையில் ஏற்படும் குரும்பை உதிர்தல், நோய் தாக்குதல், பூச்சி கட்டுப்பாடு, போன்றவற்றிற்கு தீர்வு காணும் வகையில் ஒரு நாள் பயிற்சி நடக்கிறது. இந்த பயிற்சியில் தென்னை டானிக் வேர் மூலம் செலுத்தும் முறை போன்ற பயிற்சிகள் செயல் முறை மூலம் செய்து காட்டப்பட இருக்கிறது. வேளாண் விஞ்ஞானிகளும் கலந்து கொண்டு பேசுகின்றனர். இந்த பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் பாளை. வஉசி மைதானம் எதிரே அமைந்துள்ள வேளாண் உதவி மையத்தை நேரிலோ அல்லது 0462 - 2575552 என்ற தொலைபேசியிலோ அலுவலக நாட் களில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை தொடர்பு கொண்டு இன்று (16ம் தேதி) மாலை 5 மணிக் குள் முன்பதிவு செய்ய வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தொடர் மழையால் வெப்பம் தணிந்தது

புதுச்சேரி, : புதுவை யில் கடந்த சில நாட்களாக வெயில் வாட்டி எடுத்தது. இருப்பினும் இரவில் அவ்வப்போது மழை பெய்தது. ஆனால்,

பகலில் வெப்பத்தின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது. நேற்று முன்தினமும் ஏப்ரல், மே மாதங்களில் அடிப்பது போல் வெயில் சுட்டெரித்தது. புழுக்கமும் அதிகமாக இருந்தது. இரவில் மழை பெய்யும் என எதிர்பார்த்த நிலையில் ஏமாற்றியது. இந்நிலையில், நேற்று காலை திடீரென மழை பெய்தது. காலை 6.15 மணி அளவில் தொடங்கிய மழை அரை மணி நேரம் வெளுத்து வாங்கியது. இதனால் தாழ்வான பகுதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. தொடர்ந்து, விட்டு விட்டு மழை பெய்தது. திடீர் மழையால் வெப்பம் தணிந்து, இதமான சூழல் நிலவுவதால் மக்கள் நிம்மதியும், மகிழ்ச்சியும் அடைந்துள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மேட்டுப்பாளையத்தில் விடிய விடிய பலத்த மழை: பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு; வீடுகள் இடியும் அபாயம் பொதுமக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை



மேட்டுப்பாளையத்தில் விடிய விடிய பெய்த பலத்த மழையால் பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் வீடுகள் இடியும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் கரையோர பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. விடிய விடிய பலத்த மழை

கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் கடந்த சில தினங்களாக இரவு நேரங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. இந்த மழையின் காரணமாக அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. உபரி நீர் வெளியேற்றப் படுவதால் ஆறுகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மேலும் குளம் குட்டைகளிலும் நீர்நிரம்பி வழிகிறது. நேற்று முன்தினம் இரவு நீலகிரி மாவட்டம், பில்லூர் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதி, மற்றும் மேட்டுப்பாளையம் சுற்றுவட்டார பகுதிகளில் இடி–மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இடைவெளியின்றி விடிய விடிய பெய்த இந்த மழை காரணமாக பில்லூர் அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்தது. அணைக்கு வினாடிக்கு சுமார் 1000 கனஅடி நீர் வந்து கொண்டிருந்ததால் அணையின் நீர்மட்டம் 85 அடியை எட்டியது. இதைதொடர்ந்து அணையின் நீர்மட்டத்தை ஒரே சீராக வைத்திருக்கும் பொருட்டு நேற்று காலை 6 மணிக்கு மின் உற்பத்திக்கான ஒரு எந்திரம் இயக்கப்பட்டது. இதனால் அணையில் இருந்து வினாடிக்கு 3400 கனஅடி நீர் வெளியேறியது. நீர்வரத்து குறைந்ததால் காலை 9 மணிக்கு மின் உற்பத்தி நிறுத்தி வைக்கப்பட்டது.

பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு

என்றாலும் அணையில் இருந்து வெளியேற்றப்படும் தண்ணீர் மற்றும் சுற்று வட்டாரப்பகுதிகளில் பெய்த பலத்த மழையின் காரணமாக பவானி ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. கரைபுரண்டு ஓடிய தண்ணீரால் ஆற்றின் கரையோரம் அமைந்துள்ள, பவானி அம்மன் கோவில், விளையாட்டு மாரியம்மன் கோவில் போன்ற கோவில்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது. அந்த கோவில்களுக்கு யாரும் செல்ல முடியாத அளவுக்கு கோவில்களின் நான்கு புறத்திலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. ஆற்றின் இரு கரைகளிலும் ஏராளமான வீடுகள் உள்ளன. அந்த வீடுகளை தண்ணீர் தொட்டுக்கொண்டு ஓடுவதால் வீடுகள் இடியும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே நேற்று முன்தினம் விடிய விடிய பெய்த மழையில் மேட்டுப்பாளையம்–நரிப்பள்ளம் ரோட்டில் உள்ள ஒரு

தனியார் மரஅறுவை மில் வளாகத்தில் இருந்த, 50 ஆண்டுகால பழமை வாய்ந்த வாகை மரம் வேரோடு சாய்ந்து மில்லின் மேற்கூரை மீது விழுந்தது. இதில் மேற்கூரை முழுவதும் நொறுங்கி நாசமானது. மரம் விழுந்த போது மில்லில் காவல் பணியில் ஈடுபட்டிருந்த வேலுசாமி என்பவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். மரம் விழுந்ததால் ஏற்பட்ட சேதமதிப்பு ரூ.2 லட்சம் இருக்கும் என்று கூறப்படுகிறது.

வெள்ள அபாய எச்சரிக்கை

பவானி ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் இழப்புகளை தடுக்கும் வகையில் மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் உத்தரவின் பேரில், மேட்டுப்பாளையம் தாசில்தார் எல்.கிருஷ்ணமூர்த்தி, பொதுமக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:–

பலத்த மழை மற்றும் பில்லூர் அணையில் இருந்து அதிக அளவில் தண்ணீர் திறந்து விடப்படுவதால் பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. இதனால் தேக்கம்பட்டி, நெல்லித்துறை, மேட்டுப்பாளையம், ஆலாங்கொம்பு, சிறுமுகை உள்ளிட்ட ஆற்றின் கரையோரப்பகுதிகளில், தாழ்வான இடங்களில் வசிக்கும் பொதுமக்கள் பாதுகாப்பு கருதி மேடான இடங்களுக்கு செல்லுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். பொதுமக்கள் அனைவரும் அரசுக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்து வெள்ளத்தால் ஏற்படும் உயிர்ச்சேதம் மற்றும் பொருட்சேதங்களை தவிர்த்திட முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. இதற்கிடையே மழை மேலும் சில நாட்கள் நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளதால், பவானி ஆற்றில் வெள்ள அளவு மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

# <u>இடி–மின்னலுடன் பலத்த மழை: கோவை குளங்களுக்கு நீர்வரத்து அதிகரிப்பு</u>



கோவையில் நேற்று முன்தினம் இரவு பெய்த பலத்த மழை காரணமாக குளங்களுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இடி–மின்னலுடன் மழை கோவை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் பகலில் சுமார் 30 நிமிடம் தொடர்ந்து மழை பெய்தது. அதன் பின்னர்மழை பெய்யவில்லை. ஆனால் இரவு 11 மணியளவில் இடி மின்னலுடன் கோவை மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது.வால்பாறை போன்ற மலைபகுதிகளை விட சமவெளி பகுதிகளில் தான் நேற்றுமுன்தினம் பலத்த மழை பெய்தது. பீளமேடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பெரிய நாயக்கன்பாளையம், சூலூர்,கோவை ஆகிய பகுதிகளில் பலத்த மழை பெய்துள்ளது கோவை மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 179 மி.மீட்டர் மழை பெய்துள்ளது குறிப்பிடத்ததக்கது. இதில் அதிகபட்சமாக கோவை தொண்டாமுத்தூர் பகுதியில் 36 மி.மீட்டரும் அதை தொடர்ந்து பெரியநாயக்கன்பாளையத்தில் 35 மி.மீட்டரும் மழை பெய்துள்ளது. நேற்று முன்தினம் கடும் இடி–மின்னலுடன் பெய்த மழையினால் சேதம் எதுவும் ஏற்படவில்லை.ஆனால் குளங்களுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது..

குளங்களுக்கு நீர்வரத்து அதிகரிப்பு சித்திரைச்சாவடி அணைக்கு

நீர்வரத்து அதிகரித்துள்ளது.இதன் காரணமாக சித்திரைசாவடி அணையிலிருந்து சித்திரை சாவடி வாய்க்காலில் நேற்று முன்தினம் வரை 2 அடி உயரத்துக்கு தான் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. ஆனால் அது 4 அடியாக உயர்ந்தது. சித்திரைசாவடி அணையில் நீர்வரத்து அதிகரித்ததால் கொல்ராம் பதி, நரசாம்பதி, புதுக்குளம், கிருஷ்ணாம்பதி ஆகிய குளங்களுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இந்த குளங்களுக்கு நீர் வரத்து அதிகரித்ததுள்ளதால் விவசாயத்துக்கு தண்ணீர் தட்டுப்பாடு இருக்காது என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறினார்கள். மேலும் சிங்காநல்லூர் குளத்துக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளதால் சூலூர் குளம் மற்றும் ஆண்டிப்பாளையம் குளத்துக்கு நீர் வரத்து உயரும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். மழை அளவு கோவை மாவட்டத்தில் நேற்றுக்காலை 8 மணி வரை பெய்த மழை அளவு மி.மீட்டரில் வருமாறு:–

அன்னூர்–8மி.மீட்டர்

பீளமேடு–20

மேட்டுப்பாளையம்–20

பொள்ளாச்சி–10

பெரியநாயக்கன்பாளையம்–35

சூலூர்–16

வேளாண்மைபல்கலைக்கழகம்–36

சின்னகல்லாறு–2

வால்பாறைபி.ஏ.பி.–8

வால்பாறை தாலுகா அலுவலகம் – 2

கோவைதெற்கு–22

மொத்தம்–179 மி.மீட்டர்

## அந்தியூர் வறட்டுப்பள்ள அணையின் நீர் மட்டம் 2அடி உயந்தது 27 அடியை எட்டியது




அந்தியூர் அடுத்த பர்கூர் மலைப்பகுதியின் அடிவாரத்தில் அமைந்துள்ள வறட்டுப்பள்ள அணையின் நீர் மட்டம் நேற்று பெய்த மழையால் 2 அடி உயந்து 27 அடியை எட்டியது. கடந்த சிலநாட்டகளாக அந்தியூர் மற்றும் பர்கூர் மலைப்பகுதியில் மாலைநேரங்களில் மழைபெய்து வருகின்றன அதனால் அந்தியூர் பகுதிக்கு நீர் ஆதாரமாக விளங்கும் அந்தியூர் வரட்டுப்பள்ள அணையின் நீர் மட்டம் மொத்த கொள்ளவான 33.33 அடியாகும் இவற்றில் 27 அடியாக நீர்மட்டம் உயந்துள்ளது அதனால் விவசாயிகள் மகிழ்சி அடைந்துள்ளனர் வனவிலங்குகளுக்கு குடிநீர் இன்றி ஊருக்குள் வந்த நிலமையும் மாறி வனக்குட்டைகளில் தண்ணீர் நிறம்பியுள்ளன அதனால் வனவிலங்குகள் குடிநீர் பற்றாக்குறையும் நீங்கியது தொடந்து மலைப்பகுதிகளில் மழைபெய்து வருவதால் மரங்கள் செடிகள் தலைத்துள்ளது எங்கு பார்த்தாலும் பசுமையாக மலைகள் கய்சிஅளிக்கின்றன ரோட்டின் ஓரத்தில் இருபுறங்களிலும் மலர்கள் பூத்து மலைக்கு வருவோர்களை வரவேற்பது போல் அமைந்துள்ளன இருப்பினும் அந்தியூர் பகுதியில் கடுமையான வறச்சியாக உள்ளதால் அந்தியூர் பெரியஏரி. கெட்டிசமுத்திரம் ஏரி'. சந்தியபாளையம் ஏரி, வேம்பத்தி ஏரி, ஆப்பக்கூடல் ஏரி நகலூர் ஏரி ஆகியவைகள் வறன்டே கானப்படுகின்றன தேனி மாவட்டம் மற்றும் முல்லைப்பெரியாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் முல்லைப்பெரியாறு, வைகை, மஞ்சளாறு, சோத்துப்பாறை

அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. இதில் மஞ்சளாறு அணையில் கடந்த 13–ந் தேதி நீர்வரத்து 3 கனஅடியாக இருந்தது. அணையின் மொத்த உயரம் 57 அடி. நேற்றைய நீர்மட்டம் 55 அடியை எட்டியது. நேற்று நீர்வரத்து வினாடிக்கு 345 கன அடியாகவும், அணையில் இருந்து 284 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. சோத்துப்பாறை அணையின் மொத்த உயரம் 126 அடி. நேற்றைய நீர்மட்டம் 121.03 அடி. நீர்வரத்து வினாடிக்கு 110 கன அடியாகவும், அணையில் இருந்து 3 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டது. மழை அளவு விவரம் வருமாறு:– (மில்லி மீட்டரில்) கூடலூர்– 13.5, சண்முகாநதி அணை–10, உத்தமபாளையம்–14, வீரபாண்டி–12, வைகை அணை –8.6, முல்லைப்பெரியாறு அணை–13.6, மருதாநதி அணை –3, கொடைக்கானல்– 8.

## <u>பரமக்குடியில் தொடர் மழை: 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆலமரம் வேரோடு சாய்ந்தது</u>



பரமக்குடியில் தொடர்மழை காரணமாக வேரோடு சாய்ந்த ஆலமரத்தை படத்தில் காணலாம்.

பரமக்குடியில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆலமரம் வேரோடு சாய்ந்தது.

மழை

தமிழகம் முழுவதும் பல் வேறு மாவட்டங்களில் பருவ மழை பெய்து வருகிறது. ஆனால் பரமக்குடியில் மட் டும் மழை பெய்யாமல் இருந்தது. இதனால் ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக ஆற்று நீர் உள்பட

நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து விட்டது. இதன் காரணமாக ஏராளமான வீடுகளில் ஆழ் குழாய்களில் தண்ணீர் இல்லாமல் மிகவும் அவதிப்பட்டு வந்தனர். இதேபோல நகராட்சி நிர்வாகம் சார்பில் மக் களுக்கு வினியோகிக்கப்பட வேண்டிய குடிநீரும் சீராக வழங்க முடியவில்லை. இதையடுத்து பொதுமக்களும், வணிகர்களும் ஆற்றில் ஊற்றுத் தோண்டு தண்ணீர் எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் கடந்த சில நாட்களாக பரமக்குடி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் நல்ல மழை பெய்து வருகிறது. இதனால் விவசாயிகள் ஆர்வ முடன் விவசாய பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று முன்தினம் இரவு சுமார் 1 மணி நேரத்துக்கும் மேலாக பலத்த இடி மின்னலுடன் கனமழை பெய்தது. இதைய டுத்து நகர் முழுவதும் மின்சா ரம் அடியோடு துண்டிக்கப் பட்டது. இந்த மழையால் நகர் போலீஸ் நிலையம் எதிரே இருந்த 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆலமரம் வேரோடு சாய்ந்தது. அப்போது மரம் சாயும் சத்தத்தை கேட்டு அருகில் குடியிருந்தவர்கள் வீட்டை விட்டு அலறி அடித்து ஓட்டம் பிடித்தனர். மேலும் இந்த மரம் மின் கம்பம், தொலைபேசி கம்பத்தின் மீது விழுந்ததால் அவை சேதம டைந்தன.

## <u>நடப்பு ஆண்டில் 92 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்ய திட்டம் வேளாண்மை இணை இயக்குனர் தகவல்</u>

நடப்பு ஆண்டில் 92 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்ய திட்ட மிடப்பட்டுள்ளது என்று வேளாண்மை இணை இயக்குனர் கூறினார்.

நெல் சாகுபடி

சிவகங்கை மாவட்ட வேளாண்மை இணை இயக்கு னர் கணேசன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

சிவகங்கை மாவடடத்தில் நடப்பு ஆண்டில் 92 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள் ளது. இதற்கு தேவையான உரங்கள் தொடக்க வேளா ண்மை கூட்டுறவு கடன் சங் கங்கள் மற்றும் தனியார் உரக் கடைகளில் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்

டுள்ளது. நடப்பு ஆண்டு சாகுபடி பணிகளுக்குதேவையான உரங்களில் தொடக்க வேளா ண்மை கூட்டுறவு கடன் சங்கங் களுக்கு தேவையான உரம் 2 ஆயிரம் மெட்ரிக் டன் இறக்கு மதி செய்யப்பட்டு விற் பனை செய்யப்பட்டு வருகிறது.

இருப்பு

இதே போல் தனியார் உரக் கடைகளுக்கு தேவையின் அடிப்படையில் உரங்கள் வினியோகிக்கப்பட்டு வருகிறது. மேலும் வருகிற மாதங் களுக்கு தேவையான அளவில் உரம், பூச்சி மருந்துகள் இருப்பு வைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையினை கடைபிடித்தால் குறைந்த அளவு இடு பொருள் மற்றும் தண்ணீரை பயன் படுத்தி அதிக அளவு மகசூல் பெறலாம். மேலும் மண் ஆய்வு முடிவின்படி உரச்செலவை குறைக்கலாம். இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.